## கூட்டுறவுத் துறையின்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2011–2012

### முன்னுரை

தமிழ்நாட்டில் கிராமப் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுகள் இன்றியமையாப் பங்கினை ஆற்றிவருகின்றன. அவை கடன் வழங்குதல், விவசாய விளைபொருட்கள் விற்பனை மேற்கொள்ள வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் இடுபொருள், நுகர்பொருள் ஆகியவற்றை நியாயமான விலையில் விற்பனை செய்தல் ஆகிய பணிகளை ஆற்றிவருகின்றன.

**2.** தமிழ்நாட்டில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பொதுவாக கீழ்க்கண்ட வகைகளில் அடங்கும்.

i) கடன் கூட்டுறவுகள்
ii) விற்பனைக் கூட்டுறவுகள்
iii) நுகர்வோர் கூட்டுறவுகள்
iv) கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சி அளிக்கும் கூட்டுறவுகள்

**3.** கடன் கூட்டுறவுகள் மற்றும் வங்கிகள், கிராம மற்றும் நகரக் கடன் தேவைகளை நிறைவு செய்கின்றன. விவசாய விளைபொருள் விற்பனையில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உதவி புரிகின்றன. நுகர்வோர் கூட்டுறவுகள் மாநிலத்தில் உள்ள தங்களது பரவலான அலகுகள் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதில் உதவி புரிகின்றன. இத்தகைய கூட்டுறவுகள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன.

**4.** கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், பொது மக்கள் மற்றும் மாணவர்களிடையே கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்புதல், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு தக்க பயிற்சி வழங்கி செயல் திறனை மேம்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்கின்றன.

**5.** பொது மக்களின் தேவைகளைச் சிறந்த முறையில் நிறைவு செய்யவும் கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமான அளவிற்கு பங்காற்றவும் ஏதுவாக கூட்டுறவுகளை நவீனமயமாக்கி வலிமைப்படுத்துவது அரசின் கொள்கையாகும்.

## இயல் – 1

## கூட்டுறவுக் கடன் அமைப்பு

6. தமிழகத்தில் கூட்டுறவு கடன் கட்டமைப்பு, மாநிலம் முழுவதும் பரவிய தொடர் அமைப்புகளால் நிறுவன கடன் வழங்குவதில், மிகப்பெரிய அமைப்பாகத் திகழ்கிறது. அது, சிக்கனம், சுயஉதவி மற்றும் பரஸ்பர உதவி போன்ற உயரிய நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டு ஒருங்கிணைந்த கடன் முறைகளைப் பின்பற்றிச் செயல்பட்டு வருகிறது. வைப்புகள், கடன்கள் மற்றும் பணப்பரிமாற்றம் போன்ற நிலையான வங்கியியல் சேவைகளை அளிப்பதுடன் கிராமப்புறங்களில் இடுபொருள் வழங்குதல் மேலும் விளைபொருள் விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சமூகப் பொருளாதார உயர்வுக்குப் பல்வேறு திட்டங்களைக் கூட்டுறவுக் கடன் அமைப்பு செயல்படுத்தி வருகின்றது.

7. தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கடன் அமைப்புகள் குறுகிய காலக் கடன் அமைப்பு, நீண்ட காலக் கடன் அமைப்பு மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் அமைப்பு என மூன்று வகைகளாக அமைந்துள்ளன. குறுகிய காலக் கடன் அமைப்பு கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும் உள்ளடக்கியுள்ளது. நீண்ட காலக் கடன் அமைப்பு வட்ட/வட்டார அளவில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும்,



மாநில அளவில் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியையும் உள்ளடக்கியுள்ளது. கடன் கூட்டுறவுகளில் பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் என்றொரு பிரிவும் கூடுதலாகச் செயல்பட்டு வருகிறது. இச்சங்கங்கள் அதன் உறுப்பினர்களின் கடன் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

8. குறுகிய காலக் கடன் அமைப்பு மற்றும் நீண்ட காலக் கடன் அமைப்பு கிராமப்புறங்களிலுள்ள பொது மக்களின் குறுகிய காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன் தேவைகளை நிறைவு செய்கின்றன. நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை உள்ளடக்கிய நகரக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நகர மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள நடுத்தர மற்றும் கீழ்த்தட்டு மக்களின் கடன் தேவைகளையும் ஏனைய வங்கிச் சேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் செயல்பட்டு வருகிறது.

### அ. குறுகிய காலக் கடன் அமைப்பு

9. தமிழ்நாட்டில் குறுகிய காலக் கடன் அமைப்பு மாநில அளவில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும், மாவட்ட அளவில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், கிராம அளவில் 4534 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் கொண்டு இயங்கி வருகிறது.

## (i) <u>தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை</u>

**10.** தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இணையமாகும். இவ்வங்கி, பொது மக்களிடமிருந்து பெறும் வைப்பு நிதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறும் மறுநிதி உதவி, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் போன்ற உயர் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன் ஆகியவற்றின் மூலம் நிதி ஆதாரங்களைத் திரட்டுகிறது. இவ்வங்கி, கடன் நோக்கங்களுக்கான நிதியைத் தேவைப்படும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்குவதுடன் கூட்டுறவு வங்கிகளின் மிகை நிதியை உரியவாறு பராமரிக்கிறது. இவ்வங்கி, நிதி மேலாண்மை குறித்து வழிகாட்டுதலையும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களுக்கு தகுதி மேம்பாடு தொடர்பான பயிற்சியையும் தனது வேளாண்மை கூட்டுறவுப் பணியாளர்கள் பயிற்சி நிலையம் மூலம் அளிக்கிறது. கூடுதலாக, இவ்வங்கி சென்னை பெருநகரத்திலுள்ள தன்னுடைய **45** கிளைகள் மூலம் பொது மக்களுக்கு வங்கி மற்றும் நிதிச் சேவைகளை அளித்து வருகிறது.

**11.** தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, **31.7.2011** அன்று உள்ளபடி அரசின் பங்குத் தொகை ரூ.**0.26** கோடியை உள்ளடக்கிய ரூ.**95.82** கோடி பங்கு மூலதனம், ரூ.**706.62** கோடி காப்புநிதி, ரூ.**5552.08** கோடி வைப்புத் தொகை, ரூ.**1912.60** கோடி கடன் மற்றும்



ரூ.**5844.90** கோடி கடன் நிலுவை ஆகியவற்றுடன் தொடர்ந்து வலிமையான மற்றும் நிலையான நிதிநிலையில் இருந்து வருகிறது. **2011–2012**ஆம் நிதியாண்டில் கூடுதல் இலாபம் ஈட்ட அனைத்து நடவடிக்கைகளும் முனைப்புடன் மேற்கொள்ளப்படும்.

**12.** தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் வளர்ச்சியடையச் செய்திட **தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன்** புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றினைச் செய்தது. இதன்படி **2007–08** முதல் **2011–12** வரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கான வளர்ச்சிச் செயல் திட்டங்களைத் தயார் செய்து நடைமுறைப்படுத்தி வருகிறது. ஒவ்வொரு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கமும் எட்ட வேண்டிய இலக்கினை நிர்ணயித்து அவற்றை எய்தவும், செலவுகளைக் குறைத்துத் திறம்படச் செயல்படவும், வளர்ச்சிச் செயல் திட்டம் வகை செய்கிறது. வளர்ச்சிச் செயல் திட்டங்களின் முனைப்பான செயலாக்கத்தினால் அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் அனைத்துத் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களும் இலாபத்தில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**13.** குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பின் அச்சாணியாகச் செயல்படும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மிகச் சிறப்பாகவும்

திறமையாகவும் போட்டிகளை எதிர்கொண்டு செயல்படவேண்டும். ஆதலால், இத்தலைமை வங்கி அடிப்படை வங்கியியல் முறைக்கு மாறவும் (CORE banking) நவீன வங்கியியல் வசதிகளான தானியங்கிப் பணம் வழங்கும் நிலையம் (Automated Teller Machine) அமைத்திடவும், வங்கியின் சேவையை எவ்விடத்திலிருந்தும் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**14.** தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் அடிப்படை வங்கியியல் தீர்வு (CORE Banking Solution) முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் இவ்வங்கி வணிக வங்கிகளின் தொழில்நுட்ப அளவினை எட்டியுள்ளது. மேலும், இவ்வங்கி தற்போது சென்னை மாநகரத்தில் ஆறு தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்களை (Automated Teller Machine) நிறுவியும் தேசிய நிதி இயக்கத்தில் உறுப்பினர் ஆவதற்கும் நடவடிக்கை எடுத்தும், வாடிக்கையாளர்கள் எந்த ஒரு தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரத்தையும் பயன்படுத்தி வங்கியியல் சேவை பெற வழிவகை செய்யவுள்ளது. மேலும், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நிகழ்நேர மொத்தத் தீர்வு (RTGS) மற்றும் தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (NEFT) போன்ற தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதில் தேசிய அளவில் இரண்டாவது கூட்டுறவு வங்கியாகத் திகழ்கிறது. இதன் மூலம், இவ்வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்கள் இந்தியா முழுவதும் மின்னணு நிதிப் பரிமாற்றங்கள் மேற்கொள்ள உதவிசெய்கிறது.



**15.** கூட்டுறவு வங்கிகளில் நவீனத் தொழில் நுட்பத்தைப் புகுத்தி செயல்படுத்தும் வங்கியாகத் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி திகழ்கிறது. தற்போது இவ்வங்கி மின்னணு வங்கியியல் வசதிகளை, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு அளிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் கூட்டுறவுகளிடையே வெற்றிகரமாகப் பணப்பரிமாற்றம் செய்ய முடியும். இது கிராம மக்கள் மிகக் குறைந்த செலவில் தடையில்லாத முறையில் பணத்தை அனுப்பவும், பெறவும் வழிவகை செய்யும்.

**16.** தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்காக **"தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதி"** மற்றும் **"வைப்புத் தொகை உத்தரவாத நிதி"** ஆகியவற்றைப் பராமரித்து வருகிறது. கூட்டுறவு வங்கிகளின் பங்களிப்பில் உருவாக்கப்பட்ட **"தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதி"** கூட்டுறவு உள் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வைப்புதாரர்களுக்கு உரிய காலத்தில் வைப்புத் தொகையை திருப்பிச் செலுத்த இயலாத நிலை ஏற்படின் **"வைப்புத் தொகை உத்தரவாத நிதி"** மூலம் அத்தொகையை வழங்குவதற்கு ஏதுவாக இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**17.** தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு வங்கிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் கடன்

வழங்கியமைக்காக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு சிறந்த முகமைக்கான தேசிய விருது மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

### (ii) <u>மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்</u>

**18.** மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற இணைப்புச் சங்கங்களின் கடன் தேவைகளை நிறைவு செய்து வருவதோடு, பொது மக்களுக்கும் வங்கிச் சேவை ஆற்றி வருகின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பொது மக்களிடமிருந்து பெறும் வைப்புத் தொகைகள் மூலமும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறும் மறுநிதி மூலமும் நிதி ஆதாரங்களைத் திரட்டுகின்றன.

**19.** மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டின் விவரம் :

(ரூ. கோடியில்)

| ஆண்டு | வைப்புத்தொகை | வழங்கப்பட்ட நேரடிக் கடன் | கடன் நிலுவை |
|---|---|---|---|
| 2011-12 (31.7.2011 வரை) | 13590.47 | 2231.41 | 18320.99 |

**20.** மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வைப்புகளைத் திரட்டுவதிலும் கடன் வழங்குவதிலும் நல்ல முன்னேற்றம் அடைந்தது மட்டுமல்லாமல், இணைப்புச்



சங்கங்களான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுகளின் வியாபாரத்தைப் பெருக்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டன. பல சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களைச் சீரமைத்து வட்டிச் சுமையைக் குறைப்பதற்காக மறு அட்டவணைப்படுத்தி அவற்றின் வணிக வளர்ச்சிக்கும் உதவிபுரிந்துள்ளன.

**21.** மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டினை அதிகரிக்கவும், திறனை மேம்படுத்திடவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணியாளர்களின் எண்ணிக்கையினைச் சீரமைத்து, அவர்கள் பயன் பெறும் வகையில் கடன் மதிப்பீடு, நிதி மேலாண்மை, வணிக வளர்ச்சி மற்றும் செயலற்ற சொத்து மேலாண்மை போன்ற பொருள்களில் பணியாளர்களுக்குப் பயிற்சிகள் நடத்தப்பட்டு பணியாளர்களின் செயல்திறன் மேம்படுத்தப்பட்டது.

**22.** நவீன வங்கிச் சேவையில், வங்கிகளின் திறனை மேம்படுத்த கணினிமயமாக்குவதும், தொழில் நுட்பத்தைப் புகுத்துவதும் அவசியமாகும். மேலும், கூட்டுறவுகள் வங்கிச் சேவை அளிப்பதில் பிற வங்கிகளின் போட்டியைச் சமாளிக்கும் விதத்தில் செயல்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் திறமையாகச் செயல்படப் பொதுவானதொரு வங்கியியல் மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையில் மொத்தமுள்ள 737 கிளைகளில் 733 கிளைகள்

கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கிளைகளில் விரைவில் கணினிமயமாக்குதல் பணி நிறைவடையும். மேலும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் அடிப்படை வங்கியியல் தீர்வை (Core Banking Solution) செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### (iii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

23. தமிழ்நாட்டில் 31.7.2011 அன்று உள்ளபடி மொத்தம் 4534 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உள்ளன. கிராமப்புறங்களில் வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா கடன்கள் வழங்குவதே இச்சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். விவசாய இடுபொருட்களான உரம், விதைகள் மற்றும் சிறு விவசாயக் கருவிகளை இச்சங்கங்கள் விற்பனை செய்கின்றன. கிராமப்புறங்களில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் 15569 பொது விநியோகத் திட்டக் கடைகளையும் இச்சங்கங்கள் நடத்தி வருகின்றன.

### விவசாயிகளுக்கான பயிர்க்கடன்

24. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கும் கடன்களில் முக்கியமானது பயிர்க் கடன் ஆகும். ஏற்கெனவே கடன் பெறாத விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்கிடையே குழுக்கள் அமைத்து அதன் மூலம் பயிர்க் கடன் வழங்குதல் போன்றவற்றால் கடன் பெறும் வாய்ப்பைப் பெறாதவர்களையும் உள்ளடக்கிய கடன் (inclusive credit) பெறும் வாய்ப்பை



உருவாக்கும் முயற்சியில் இவை ஈடுபட்டுள்ளன. இதர வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த நோக்கங்களான விவசாயப் பண்ணை இயந்திரங்கள் வாங்குவது, நுண்ணீர்ப் பாசனம், நில மேம்பாடு மற்றும் பால் பண்ணை போன்றவற்றிற்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வீட்டு வசதி மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு கடன்கள் வழங்குகின்றன.

25. பயிர்க்கடன் **ரூ.3000 கோடி** அளவிற்கும் முதலீட்டுக் கடன் **ரூ.300 கோடி** அளவிற்கும் 2011–12ஆம் ஆண்டில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### கூட்டுப் பொறுப்புக் குழுக்கள்

26. கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் விவசாயக் கடன் வழங்கும் முறை தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் 2008–09ஆம் ஆண்டில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் வழக்கமாக அளிக்கப்படும் கடன் வசதிகள் மட்டுமல்லாது ஒவ்வொரு குழுவிற்கும் சுழல் நிதியாக ரூ.10000 வழங்கப்படுகிறது. இதுவரை எந்த நிறுவனங்கள் மூலமும் கடன் பெற இயலாதிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகள், குத்தகைக்குப் பயிரிடுவோர் மற்றும் வாய்மொழி குத்தகைதாரர்கள் ஆகியோர் அடங்கிய 32,284 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால், இதுவரை கடன் பெறும் வாய்ப்பைப் பெறாதவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டதோடு புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்களைக் கையாண்டு அறுவடைக்குப்

பிந்தைய நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டு கூட்டு விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்வது போன்றவை சாத்தியமாகியுள்ளன. இதனால் சிறு மற்றும் குறு விவசாயிகளின் சிதறுண்டு கிடக்கும் நிலங்களை ஒருங்கிணைத்து இதுவரை உயர்தொழில் நுட்பத்தால் பயன் ஏதும் பெறாத இத்தகைய விவசாயிகள் உற்பத்தியை அதிகரித்து அதன் மூலம் வருமானத்தையும் அதிகரித்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

27. உழவு இயந்திரம், பூச்சி மருந்து தெளிப்பான் போன்ற கருவிகளை வாங்கவும், விதை மற்றும் உரம் ஆகியவற்றை ஒரு குழுவாக வாங்கி அனைவரும் பயன்படுத்தும் வகையில் இந்தக் குழுக்கள் செயல்படுகின்றன. 2011–12ஆம் ஆண்டில் 10000 கூட்டுப்பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்படும். மேலும், சங்க அளவில் உள்ள இத்தகைய கூட்டுப் பொறுப்புக் குழுக்களை இணைத்து உழவர் மன்றங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது புதிய கருத்துக்களையும் தொழில்நுட்பங்களையும் பகிர்ந்துகொள்ள ஒரு தளமாக அமையும்.

**<u>வட்டி மானியம் மற்றும் வட்டி இழப்புக்கான நிதி உதவி</u>**

28. உற்பத்தியைப் பெருக்க விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் மிகக் குறைந்த வட்டியில் விவசாயக்கடன் வழங்க வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறது. கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்களுக்கு ஏற்படும் வட்டி இழப்புத் தொகையை அரசே முழுவதுமாக ஈடு செய்யும். எனவே, கூட்டுறவுகள் அவற்றின் சொந்த நிதியிலிருந்து வழங்கிய பயிர்க்கடன்களுக்கு



2 விழுக்காடு வட்டி மானியம் வழங்கப்படும். இதே போன்று, வட்டியில்லாப் பயிர்க்கடன் வழங்கும் திட்டத்தால் ஏற்படும் மொத்த வட்டி இழப்பை அரசே வழங்கும்.

**<u>விவசாயக் கடன் அட்டைத் திட்டம்</u>**

29. விவசாயிகளுக்கு கடன்களைத் தேவையான காலத்தில் வழங்கிட விவசாயக் கடன் அட்டைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட கடன் அளவிற்குட்பட்டு தேவையான கடன் தொகையினை எப்பொழுது வேண்டுமானாலும் விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம்.

**<u>நலிந்த பிரிவினருக்கு கடன் வழங்குதல்</u>**

30. நலிந்த பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடனில் 30 விழுக்காட்டிற்கு குறையாமல் வழங்க வேண்டும் என்று தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிர்ணயம் செய்துள்ளது.

**<u>தானிய ஈட்டுக்கடன்</u>**

31. சிறு மற்றும் குறு விவசாயிகள் அறுவடைக் காலங்களில் விலை குறைவாக இருக்கும்போது தங்கள் தானியங்களைச் சேமித்து வைத்து, உரிய காலத்தில் விலை நல்ல நிலையை எய்தியவுடன் விளைபொருட்களை விற்க உதவுவதற்குத் தானிய ஈட்டுக் கடன் திட்டம்

வடிவமைக்கப்பட்டது. 2011–2012ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் ரூ.100 கோடி அளவிற்குத் தானிய ஈட்டுக்கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

<u>**வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டுக்கடன்**</u>

**32.** வேளாண் விளைச்சல் மற்றும் உற்பத்தியில் ஏற்கக் கூடிய வளர்ச்சியை உறுதிப்படுத்த விவசாயத்தில் தேவையான முதலீடு செய்வது அவசியம். இதனை கருத்தில் கொண்டு, கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்கள், நுண்ணீர்ப்பாசனம், கறவை மாடுகள், நில அபிவிருத்தி, வேளாண் இயந்திரங்கள் போன்ற முதலீட்டு நடவடிக்கைகளுக்கு கடன்கள் வழங்கி வருகின்றன. 2011–2012ஆம் ஆண்டில் இவ்வகை கடன்கள் வழங்க ரூ.300 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<u>**சிறு வணிகக் கடன்**</u>

**33.** நகர்ப்புறங்களில் உள்ள சிறு வணிகர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்ய கூட்டுப் பொறுப்புக் குழு அமைத்து அதன் மூலம் கடன் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் நகரக் கூட்டுறவு வங்கிகளும் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பூ வணிகம், காய்கறிகள், பழங்கள் வணிகம் செய்தல், பெட்டிக் கடை நடத்துதல் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்களுக்கு எவ்விதப் பிணையமுமின்றி ரூ.10000 கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2011–12ஆம் ஆண்டில் ரூ.125 கோடி



அளவிற்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டு, 31.07.2011 முடிய ரூ. 26.89 கோடி அளவிற்கு சிறுவணிகக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

<u>**சுய உதவிக் குழுக்களுக்கு கடன்**</u>

**34.** தமிழகத்தில் சுய உதவிக் குழுக்கள் திட்டமானது கூட்டுறவுகளின் செயல்திறன் உதவியுடன் தர்மபுரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. கூட்டுறவுக் கடன் கட்டமைப்பு தொடர்ந்து சுய உதவிக்குழுக்களுக்கு உதவுவதுடன் அவற்றின் அனைத்துக் கடன் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறது. மேலும் 2011–2012ஆம் ஆண்டில் ரூ.500 கோடி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 31.07.2011 முடிய ரூ.97.72 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

<u>**மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்**</u>

**35.** மகளிர் தொழில் முனைவோர் சிறு தொழில் தொடங்கவும் சேவை மையங்கள் அமைக்கவும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் நகரக் கூட்டுறவு வங்கிகளும் ரூ.10 இலட்சம் வரை கடன்கள் வழங்கி வருகின்றன. 2011-12ஆம் ஆண்டிற்கு ரூ.40 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 31.07.2011 முடிய 1997 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.6.70 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

## பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்

36. இத்திட்டத்தின் கீழ், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு ரூபாய் ஒரு இலட்சம் வரை கடன் வழங்குகின்றன. இக்கடன்கள் 36 மாத தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படும். 2011-12ஆம் ஆண்டிற்கு ரூ.30 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 31.07.2011 முடிய 2110 மகளிர்க்கு ரூ. 6.94 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

## அரசு பங்கு மூலதன உதவி

37. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்ற குறிப்பிட்டவர்களுக்கு அவர்களின் கூட்டுறவு கடன் சங்கங்களில் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக பங்கு மூலதன உதவியை அரசு செய்து வருகிறது.

### (அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன்

38. ஆண்டுதோறும் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன்கள் வழங்குவதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினர்களின் கடன் பெறும் திறன் அதிகரிக்கப்படுகிறது. 2011–2012ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் 8,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ரூ.250 வீதம்



ரூ.20 இலட்சமும், நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ரூ.500 வீதம் ரூ.5 இலட்சமும் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்படும்.

### (ஆ) மகளிர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன்

39. கிராமப்புறங்களிலுள்ள மகளிர் குறிப்பாக நலிவடைந்த பிரிவைச் சார்ந்த மகளிரின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடனை அரசு வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் 2000 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.500 வீதம் ரூ.10 இலட்சம் அளவிற்குப் பங்கு மூலதனக் கடன் வழங்கப்படும். தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளைச் சேர்ந்த 500 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.1000 வீதம் ரூ.5 இலட்சம் பங்கு மூலதனக் கடன் வழங்கப்படும். நகரக் கூட்டுறவு வங்கிகளின் 1000 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.500 வீதம் ரூ.5 இலட்சம் பங்கு மூலதனக் கடன் வழங்கப்படும். இவ்வாறு 2011–12ஆம் ஆண்டில் 3500 பயனாளிகளுக்கு ரூ.20 இலட்சம் பங்கு மூலதனக் கடன்கள் வழங்கப்படும்.

### (இ) மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன்

40. மாற்றுத் திறனாளிகளின் கடன் பெறும் தகுதியை அதிகரிக்க 2011-12ஆம் ஆண்டில் ரூ.500

வீதம் 1000 மாற்றுத்திறனாளிகளுக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன் வழங்கப்படும்.

**குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பினைப் புத்துயிரூட்டும் திட்டம்**

**41.** குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பானது கடன்கள் வசூல் செய்ய இயலாத நிலை, அதிக அளவிலான பணியாளர் செலவுகள், இதரச் செலவுகள் மற்றும் திறனற்ற மேலாண்மை போன்ற காரணங்களால் சிரமத்திலுள்ளது. ஆனால் குறுகிய காலக் கடன் அமைப்பானது, கிராமப்புறக் கடன் கட்டமைப்பில் ஒரு முக்கியமான பகுதியாக உள்ளதால், இந்திய அரசு அதனைப் புதுப்பிக்கத் திட்டத்தினை வகுத்தது. அதன்படி இந்திய அரசு மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன், தேவையான சட்டம் மற்றும் நிறுவனச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், இத்திட்டத்தினைச் செயல்படுத்தவும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத் திட்டத்தில் தமிழக அரசு கையெழுத்திட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பின் உறுப்புகளான கூட்டுறவு சங்கங்களுக்கும், வங்கிகளுக்கும் 31.3.2004 அன்று உள்ளபடியான குவிந்த நட்டம் முழுவதுமாக மறு முதலீடு செய்யப்படும். அவ்வாறே 31.3.2004 அன்று இருந்த 4540 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் சிறப்புத் தணிக்கை முடிக்கப்பட்டு அவற்றின் நட்டம் ரூ.2129.50 கோடி எனக் கணக்கிடப்பட்டது. இதுவரை 4296 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு மாநில



அரசும், மத்திய அரசும் முறையே ரூ.230.82 கோடி மற்றும் ரூ. 1080.12 கோடி வழங்கியுள்ளன. மீதமுள்ள தகுதியான தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் தகுதியான மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் மறு முதலீடு நிதியை அனுமதிக்கவும் வழங்கிடவும் நடப்பாண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புகளின் வணிகச் சூழ்நிலையில் முன்னேற்றத்தைக் கொண்டுவருவதற்கு ஏதுவாக 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள் மற்றும் துணைவிதிகள் ஆகியவற்றிற்குத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதேபோன்று திறமையான பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்களுக்குத் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி உதவியுடன் புத்தறிவுப் பயிற்சி அளித்தல் போன்றவற்றின் மூலம் வங்கியியல் நடைமுறை மற்றும் மேலாண்மை ஆகியவற்றில் தொழில் நுட்ப உத்திகளை அறிமுகப்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**42.** இச்சங்கங்களின் நடைமுறை மற்றும் அதன் மீதான கண்காணிப்புப் பணியினை மேம்படுத்த, பொதுக் கணக்கு முறை மற்றும் மேலாண்மை தகவல் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**43.** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை வலுப்படுத்தவும் அவற்றின் வாழ்திறனை

மேம்படுத்தவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் மூன்று வகையாகும்.

அ. பன்முகப்படுத்தும் நடவடிக்கைகள்
ஆ. செலவினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்
இ. ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள்

**<u>தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பல்வகை செயல்பாட்டு நிறுவனங்களாக மாற்றுதல்</u>**

**<u>பன்முகப்படுத்துதல்</u>**

**44.** இதுவரை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கடன் வழங்கும் நிறுவனங்களாக மட்டுமே செயல்பட்டு வந்துள்ளன. ஒரு வழி வருமானம் மற்றும் குறைவான வாய்ப்புகள் ஆகியவற்றை மட்டும் சார்ந்திருந்ததே வாழ்திறன் இல்லாததற்கு முக்கியக் காரணங்களாக இருந்தன. தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பல்வேறு சேவைகளை அளிக்க முடியும் எனவும், அதன் மூலம் கிராமப் பொருளாதாரத்தில் மாற்றத்தைக் கொண்டு வரமுடியும் எனவும் அறியப்பட்டது. எனவே, தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தங்கள் நடவடிக்கைகளை மாற்றி இதரச் சேவைகளையும் அளிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன.



**<u>(அ) இடுபொருட்கள் விற்பனையை மேம்படுத்துதல்</u>**

**45.** உரம், விதைகள் மற்றும் விவசாய இடுபொருட்களின் விற்பனையை மேம்படுத்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. 2011–2012ஆம் ஆண்டு ரூ.41 கோடி மதிப்பிற்கு விதைகள் விற்பனை செய்யவும் ரூ.700 கோடி மதிப்பிற்கு உரம் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**<u>(ஆ) வேளாண் பாதுகாப்பு மையம்</u>**

**46.** மண் மற்றும் தண்ணீர் பரிசோதனை மற்றும் வேளாண் ஆலோசனை வழங்குதல் போன்ற சேவைகளை விவசாயிகளுக்கு வழங்க, 182 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வேளாண் பாதுகாப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.3 இலட்சம் மற்றும் தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து ரூ.3 இலட்சம் ஆக மொத்தம் ரூ.6 இலட்சம் செலவில் ஒவ்வொரு வேளாண் பாதுகாப்பு மையமும் நிறுவப்படுகின்றது. இந்த வேளாண் பாதுகாப்பு மையங்கள் மண் பரிசோதனைகளையும், பாசன நீர் பரிசோதனைகளையும் செய்கின்றன.

**<u>(இ) பொதுச் சேவை மையங்கள்</u>**

**47.** உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் வலைதளம் மற்றும் வலைதளமில்லா மின்னணு தேவைகளை அளிப்பதற்காக 537 தொடக்க

வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் பொது சேவை மையங்கள் செயல்படுகின்றன. மின்னஞ்சல், மின்னணு கல்வி, நிலவுடமை ஆவணங்களின் நகல் வழங்குதல், இணையதளம் மூலம் பயணச்சீட்டு பெறுதல் போன்றவை வலைதள மின்னணு சேவைகளாகும். ஒளி நகல், உடனடி புகைப்படங்கள் எடுத்தல் போன்றவை வலைதளமில்லா மின்னணு சேவைகளாகும்.

**(ஈ) <u>வேளாண் சேவை மையங்கள்</u>**

**48.** முக்கிய வேளாண் பணிக்காலங்களில் ஆட்கள் பற்றாக்குறை பெருகிவரும் இக்காலக்கட்டத்தில், வேளாண்மையில் இயந்திரமயமாக்குதலைப் புகுத்துவது அவசியமாகிறது. இவ்வியந்திரமயமாக்குதலின் பயன்பாட்டினை சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற இயலவில்லை. ஏனென்றால், பல்வேறு காரணங்களால் குறிப்பாக நிதி வசதி இல்லாததால் இவ்வியந்திரங்களைச் சொந்தமாக வாங்கவோ வாடகைக்கு எடுக்கவோ இயலவில்லை. வேளாண் இயந்தரமயமாக்குதலின் பயனைப் பெற விவசாயிகளுக்கு உதவும் வகையில் **883** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வேளாண் சேவை மையங்கள் செயல்படுகின்றன. இந்த மையங்கள் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் பண்ணைக் கருவிகளை நியாயமான வாடகையில் அளித்து அவர்களது விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்திக் கொள்ள உதவுகிறது. முக்கியமாக சிறு மற்றும் குறு விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் மித அழுத்த கருவிகளான மினி டிராக்டர்கள், இணைப்புக் கருவிகளுடன் பவர்டில்லர், நெல் நடவு



இயந்திரங்கள் ஆகியவற்றை வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் வாடகைக்கு விடுகின்றன. பல வேளாண் சேவை மையங்களை அமைப்பதன் மூலம் கூட்டுறவுகள் வழி நடத்தும் பண்ணை இயந்திரமயமாக்குதலை மேலும் விரிவுபடுத்தவும் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இருப்பை பன்மடங்கு அதிகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆண்டு **400** தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்படும். இதற்கு அரசு மானியம் **50** விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.**20** இலட்சம் வழங்கப்படும்.

**<u>இதர நிதி சேவைகள்</u>**

**<u>காப்பீடு</u>**

**49.** தற்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வைப்பு மற்றும் கடன் சேவைகளை அளித்து வருகின்றன. இவை பணப்பரிமாற்றம் மற்றும் காப்பீடு போன்ற சேவைகளையும் அளிக்க முடியும் எனப் பெருமளவில் எதிர்நோக்கப்படுகிறது. ஏற்கனவே தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து ஆயுள் மற்றும் பொது காப்பீட்டு திட்டங்களை வழங்கி வருகின்றன. இத்திட்டம் இந்த ஆண்டு விரிவுபடுத்தப்படும்.

**<u>பணப்பரிமாற்றம்</u>**

**50.** தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி டாட்டா கன்சல்டன்சி சர்வீஸ் என்ற நிறுவனத்துடன்

இணைந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களில் மின்னணு கணக்குகளைப் பராமரிக்கும் சேவையை அளிக்கிறது. இதன் மூலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர்கள் கூட்டுறவு நிறுவனத்திலேயே பணப் பரிமாற்றம் செய்துகொள்ளவும் இந்தியாவில் உள்ள எந்த வங்கியிடமிருந்தும் பணம் பெற்றுக்கொள்ளவும் முடியும். இந்த முயற்சியின் முன்னோட்ட செயல்பாடு ஆகஸ்ட்–செப்டம்பர் 2011இல் தொடங்கும் எனவும் இத்திட்டத்தின் முழு செயலாக்கமும் டிசம்பர் 2011இல் முடிவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் பண அஞ்சலுக்கு மாற்றாக நம்பத்தக்க வசதியான மற்றும் செலவு குறைவான பணப் பரிமாற்ற சேவையை வழங்க இயலும். இது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வருமானத்தைப் பெருக்குவதுடன் தொலைதூரப் பகுதியில் உள்ள கிராம மக்களுக்கு குறிப்பாக வெளியிடங்களில் வசிப்பவர்களுக்கு பெரும் அளவில் பயன் அளிப்பதாக விளங்கும்.

**<u>செலவினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்</u>**

51. தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பணியாளர் எண்ணிக்கை முறைப்படுத்தப்பட்டு, மிகுதியான பணியாளர்கள் தேவைப்படும் சங்கங்களுக்கு மறு பரவலாக்கம் செய்யப்படுகின்றனர். பணியாளர் மற்றும் இதர செலவினம், நிகர வருமானத்தில் 50 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும்.



**<u>ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்</u>**

52. தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கடன் வழங்கும் நடவடிக்கைகளில் கிடைக்கும் விளிம்புத் தொகையை உயர்த்துவது அவசியமாகிறது. இதற்கு மேம்பட்ட வசூல், நல்ல கடன் மதிப்பீடு மற்றும் செயல்படா சொத்துக்களை குறைப்பது போன்றவை அவசியமாகும். பயிற்சிகள் அளிப்பது மற்றும் தீவிரக் கண்காணிப்பின் மூலம் இவை எய்தப்படும்.

**<u>கணினிமயமாக்குதல்</u>**

53. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பல்வேறு வகையான சேவைகளை அளிக்க வேண்டியுள்ளதுடன், வணிக வங்கிகளுடன் போட்டியிடவும் வேண்டியுள்ளன. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பும், தொழில்நுட்பமும் இல்லாமல் இது சாத்தியமில்லை. எனவே பொதுவான கணக்குமுறை அறிமுகப்படுத்தப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைக் கணினிமயமாக்குதல் முன்னேற்றத்தில் உள்ளது. இந்த ஆண்டின் இறுதிக்குள் அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் முழுமையாக கணினிமயமாக்கப்படும்.

**ஆ. <u>நீண்ட காலக் கடன் அமைப்பு</u>**

54. நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பானது, சென்னையிலுள்ள தலைமை வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் வட்ட / வட்டார அளவில் உள்ள 180

தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை உள்ளடக்கியதாகும். இந்த நிறுவனங்கள், அவற்றின் உறுப்பினர்களுக்கு சிறு பாசனம், தோட்டக்கலை, மலைத் தோட்டப் பயிர்கள் மற்றும் இதர வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கு முதலீட்டுக் கடன்கள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

### i) <u>தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, சென்னை</u>

**55.** தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மறு நிதி உதவி அளிக்காத காரணத்தால், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் செயல்பாடுகள் முற்றிலும் பாதிக்கப்பட்டன. எனினும், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் சிறு பாசனம் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களுக்கு கடன் வழங்குவதற்காக தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து கடனுதவி வழங்கி வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனது சொந்த மற்றும் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நீண்டகால வேளாண்மைக் கடன்கள் இயல்பாகவே ஆபத்தானவை என அறியப்பட்டதால் இவ்வங்கிகள் நகைக்கடன் போன்ற குறுகிய காலக் கடன்கள் வழங்கத் தொடங்கியுள்ளன. அவ்வாறே இவ்வங்கி தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி



கழகத்திடமிருந்தும் தலா ரூ.100 கோடி நிதியுதவி பெற்று அவற்றை தனது சொந்த மற்றும் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் வளர்ச்சி வங்கிகள் மூலம் நகைக்கடன் வணிகத்தைப் பெருக்குவதற்கு பயன்படுத்தியுள்ளது. 2011–2012ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தனது கிளைகள் மற்றும் விரிவாக்கக் கிளைகள் மூலம் ரூ.200 கோடி மதிப்பிற்கு நகைக்கடன்கள் வழங்கிடவும், அதேபோல் இவ்வங்கி தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் ரூ.300 கோடி நகைக் கடன்கள் வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### ii) <u>தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்</u>

**56.** தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் நுண்ணீர்ப் பாசனக் கடன்கள், நில அபிவிருத்தி செய்தல், பண்ணை இயந்திரமயமாக்கல், தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு மற்றும் அதனைச் சார்ந்த கடன்கள், கிராம வீட்டுவசதி மற்றும் பண்ணை சாராக் கடன்கள் போன்ற கடன்களை வழங்க உருவாக்கப்பட்டுள்ளன. மேற்படி கடன்களைத் திருப்பிச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் ஆகும்.

**57.** தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதியுதவி வசதி இல்லாததால், இந்த வங்கிகள் செயலிழந்த நிலைக்குச் சென்றன. பண்ணைசாராக் கடன்கள் தவணை தவறிய கடன்

தொகை வசூலிப்பதன் மூலமும் கடன் தள்ளுபடித் திட்டத்தின் கீழ் பெற்ற தொகையைப் பயன்படுத்தியும் இவ்வங்கிகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு தங்களது பொதுவான வணிக நடவடிக்கைகளில் கூடுதலாகக் குறுகிய கால நகைக்கடன் வழங்க ஊக்குவிக்கப்பட்டன. **2011–2012**ஆம் ஆண்டில் ரூ.**1000** கோடி மதிப்பிற்கு நகைக்கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**58.** உயர்நிதி நிறுவனங்களான தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து நிதியுதவி பெறுவதுடன் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைத் திரட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கான பொது வங்கியியல் மென்பொருளைப் பயன்படுத்துவதன் மூலம் கணினிமயமாக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் மற்றும் அனைத்துத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிலும் இந்த மென்பொருளைப் பயன்படுத்துவது மார்ச் **2012**இல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிக தொழில்நுட்பத்துடன் கூடிய வேளாண் திட்டங்கள் மற்றும் பண்ணைசாரா திட்டங்களுக்குக் கடன் வழங்கல் தொடர்பாக வங்கிப் பணியாளர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்கப்படும்.

**59.** மேலும் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு பகுதியாக இவ்வங்கிகளுக்கு



முன்னோடி காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து காப்பீடு வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடக்க முயற்சிகள் மூலம் நல்ல வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**60.** நீண்ட காலக் கடன் கட்டமைப்பினைத் தற்போது புத்துயிரூட்ட வேளாண்மை மற்றும் ஊரகப் பகுதிகளுக்குத் தேவையான கடன் வசதிகளை குறுகிய காலக் கடன் கட்டமைப்பான மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அளித்து வருகின்றன. நுண்ணீர்ப் பாசனம் மற்றும் பண்ணை இயந்திரமயமாக்குதலுக்குப் போதிய நிதியுதவி அளிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, TANHODA, IAMWARM மற்றும் அத்தகைய இதர முகமைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு கூட்டுறவு வங்கிகள் கடன் வசதிகளை அளிக்கும்.

**<u>நீண்ட காலக் கூட்டுறவு கடன் கட்டமைப்பிற்கு புத்துயிரூட்டுதல்</u>**

**61.** நீண்ட காலக் கடன் அமைப்பினை தற்போது புத்துயிரூட்டும் வாய்ப்பாக பேராசிரியர் வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளைத் தமிழக அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு மத்திய அரசுக்கு இசைவு தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய அரசின் வழிகாட்டுதல் எதிர்பார்க்கப்படுகிறது.

## இ. <u>நகரக் கூட்டுறவு வங்கிகள்</u>

**62.** தற்போது மாநிலத்தில் **120** நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. நகரக் கூட்டுறவு வங்கிகள் நகரம் மற்றும் புறநகர்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கிச் சேவை மற்றும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. அவை, பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதி பெற்று சிறு வணிகர்களுக்கும் கைவினைஞர்களுக்கும் நடுத்தர வருவாய் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கும் வீடுகட்டுதல், வணிகம், கல்வி, நுகர்வோர் கடன் மற்றும் வேளாண் சாராக் கடன்கள் போன்ற நோக்கங்களுக்கு கடன் அளிக்கின்றன. **2011-12**ஆம் ஆண்டில் ரூ.**5920** கோடி அளவிற்கு இவ்வங்கிகள் கடன்களை அனுமதித்து வழங்கிடவும், ரூ.**4500** கோடி மதிப்பிற்கு வைப்புத் தொகை திரட்டிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. நகரக் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் மொத்த கடன்களில் **60%** அளவிற்குக் குறையாமல் முன்னுரிமைப் பிரிவினருக்கும், அதில் **25%** சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கும் வழங்கப்படும்.

**63.** நகரக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்த மாநில அரசு, இந்திய ரிசர்வ் வங்கியுடன் ஒரு புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளது. அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகளையும், அவற்றின் கிளைகளையும் கணினிமயமாக்குதல் பணி முன்னேற்றத்தில் இருந்துவருகிறது. இது நகரக் கூட்டுறவு வங்கிகளின்



செயல்பாட்டுத் திறனை அதிகரித்து அதன் மூலம் தேசிய மயமாக்கப்பட்ட வணிக வங்கிகளுக்கு இணையாக வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட சேவையை அளிக்க முடியும்.

## <u>இயல் – 2</u>

## <u>கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்</u>

**64.** கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விவசாய உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை ஆதாயமான விலைக்கு விற்க உதவுதல், வேளாண் இடுபொருட்களை வழங்குதல், விளைபொருட்களின் ஈட்டின் பேரில் கடன் வழங்குதல், வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்துதல், மதிப்பினைக் கூட்டி விற்பனை செய்தல் ஆகிய குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் அமைப்பு இரண்டடுக்கு அமைப்பாக உள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மாநில அளவிலான தலைமை சங்கமாகச் செயல்பட்டு வருகிறது. 110 தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களின் வேளாண் விளைபொருள் விற்பனைச் சங்கங்களுக்கு மண்டல அளவிலான இணையமாக செயல்படுகின்றது.

### அ . <u>தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்</u>

**65.** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1959ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன்



சங்கங்கள் மூலமாக உர விற்பனையிலும், இடுபொருட்கள் விற்பனையிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடிக்கு அருகில் உள்ள பாமணி என்ற இடத்தில் இவ்விணையத்திற்குச் சொந்தமான உரக்கலவை ஆலை உள்ளது. மேற்படி கலவை உரம் ‘பாமணி’ என்ற பெயரிலேயே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இவ்விணையத்திற்கு 28,640 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 38 சொந்தக் கிடங்குகளும், சென்னையில் 3,850 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரு குளிர்பதனக் கிடங்குகளும் உள்ளன. இவ்விணையம், அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் ஆணைகளின் அடிப்படையில், அடிப்படை ஆதார விலைத் திட்டத்தின் கீழ் தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகமையாக தமிழ்நாட்டில் செயல்பட்டு, கொப்பரை மற்றும் மிளகாய் போன்ற வேளாண் விளைபொருட்களைக் கொள்முதல் செய்கிறது. இவ்வருடம் ரூ.695 கோடிக்கு புரள் வணிகம் மேற்கொள்ள எதிர்நோக்கப்படுகிறது. 2011–12ஆம் ஆண்டில் 31.7.2011 வரையில் ரூ.160.88 கோடி அளவிற்கு உர விற்பனை செய்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், டிஏபி உரத்தினை விநியோகம் செய்ய ஒரு முகமையாக நியமிக்கப்பட்டு இயங்கி வருகிறது. அது முதல் தமிழகம் முழுவதும் விவசாயிகளுக்கு டிஏபி உரம் கிடைப்பதற்கு சீரிய முயற்சி மேற்கொண்டு வருகிறது . 2011-2012ஆம் ஆண்டில் உர வணிகத்தில் தனது பங்கினை உயர்த்த இணையம் பெரு முயற்சி மேற்கொண்டுள்ளது.

**66.** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தேசிய கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு

முகமையாகச் செயல்பட்டு வருகிறது. மேலும் விதை விற்பனை, உயிர் உர விற்பனை ஆகியவற்றைக் கணிசமாக உயர்த்த முயற்சி மேற்கொள்வதுடன் வேளாண் விளை பொருள் விற்பனையிலும் இணையம் இவ்வாண்டு கவனம் செலுத்தும். தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் கோயம்பேடு மற்றும் பேசின் பிரிட்ஜ் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் இரண்டு குளிர்ப்பதன கிடங்குகளை நவீனமயமாக்கும் பணி நடப்பு ஆண்டில் முடிக்கப்படும்.

67. கடந்த பல ஆண்டுகளாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் பெருத்த நட்டத்தில் இயங்கி வந்துள்ளது. இதன் வருமானத்தைப் பெருக்க அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அரசு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தை டை–அம்மோனியம் பாஸ்பேட் (டிஏபி) உர விற்பனைக்கு, மாநில அளவில் ஒரு முகமையாக நியமித்து செயல்படுத்தி வருகிறது. **வட்டியில்லா வழிவகை முன்பணத்தை நடப்பு நிதி ஆண்டில் ரூ.150 கோடியாக உயர்த்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** இதன் விளைவாகவும் முழு ஈடுபாட்டுடன் பிற வணிக நடவடிக்கையில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதாலும் கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், அந்நிலையிலிருந்து விடுபட்டு தற்பொழுது இலாபம் ஈட்டத் தொடங்கியுள்ளது. இப்பயன்களை ஒருங்கிணைத்து தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தை ஒரு துடிப்புமிக்க நிறுவனமாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



**<u>தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்</u>**

**68.** தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையத்தில், **12** கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இணைக்கப்பட்டு, காவேரி பாசனப்பகுதியில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. உர விற்பனையை முதன்மையாகச் செய்து வரும் இவ்விணையம், தற்போது தனது செயல் எல்லையில் விதை விற்பனையும் செய்து வருகின்றது. **2011–12**ஆம் ஆண்டில் 31.7.2011 வரை ரூ.**9.64** கோடிக்கு இரசாயன உரங்கள் விற்பனை செய்துள்ளது.

**ஆ. <u>கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்</u>**

**69.** மாநிலம் முழுவதும் **110** வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வேளாண் விளைபொருள் விற்பனை, உரம் மற்றும் வேளாண் இடுபொருட்கள் விற்பனை ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. பெரும்பான்மையான சங்கங்கள் பொது விநியோகத் திட்டத்தில் முதன்மைச் சங்கங்களாகவும், நியாய விலைக் கடைகளை நடத்தும் சங்கங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், துடியலூர் கூட்டுறவு விவசாய சேவை சங்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறிப்பிடத் தக்கவை ஆகும்.

70. நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் தனது உருளைக்கிழங்கு ஏல மையத்தில் உருளைக்கிழங்கு தரம் பிரிக்கும் இயந்திரத்தின் மூலம் தரம் பிரிக்கும் முறையை நிறுவி விற்பனை மையத்தை நவீனப்படுத்தி செயல்பட்டு வருகிறது. சங்கத்தின் மேட்டுப்பாளையம் ஏல விற்பனை மையம் மூலம் மாவட்டத்தில் விளையும் உருளைக்கிழங்கில் 60 விழுக்காடு விற்பனை செய்யப்படுகிறது . உருளைக் கிழங்கு உயர் ரக விதைகள் விற்பனை, சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு விவசாயிகளிடமிருந்து நல்ல வரவேற்பு உள்ளது. இது தவிர உதகமண்டலத்தில் ஒரு காய்கறி ஏல விற்பனை மையத்தையும் இச்சங்கம் நடத்துகிறது. மேலும், இச்சங்கம் இப்பகுதியில் விளையும் பயிர்களுக்கு ஏற்ற உரக் கலவைகளை உற்பத்தி செய்து நீலகிரி விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறது. 2011–12 ஆம் ஆண்டில் இக்கூட்டுறவுச் சங்கத்தின் மொத்த விற்பனை அளவு ரூ.70 கோடியாகவும் விதை விற்பனை ரூ.3 கோடி மதிப்பிற்கும் உரக் கலவை விற்பனை ரூ.3.50 கோடி மதிப்பிற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

71. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நாமக்கல் மாவட்டத்தில் பருத்தி, எள், நிலக்கடலை ஆகிய வேளாண்மை விளைபொருட்களின் முக்கிய விற்பனைத் தளமாக செயல்படுகின்றது. மேலும் இச்சங்கம் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து விவசாய உபகரணங்கள் மற்றும் நவீன இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்கி,



தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்/வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் விவசாயப் பெருமக்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யும் பணியினை தொடங்கியுள்ளது. 2011–12ஆம் ஆண்டில் இச்சங்கத்தின் புரள் வணிகம் ரூ.120.85 கோடியாக அமையும்.

72. தரமான விதைகள் விற்பனையில் துடியலூர் கூட்டுறவு வேளாண் சேவை நிறுவனம் சிறந்து விளங்குகிறது. 2011-12ஆம் ஆண்டில் ரூ. 6 கோடி அளவிற்கு விதை விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது.

**<u>வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்</u>**

**(i) <u>வேளாண் விளைபொருள் விற்பனை</u>**

73. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பின்வரும் இருவகை விற்பனைப் பணிகளை ஆற்றி வருகின்றன.

அ) வணிகர்கள் மற்றும் விவசாய உறுப்பினர்களின் வணிகத்திற்காக ஏல விற்பனைக் களங்கள், உலர்களங்கள், கிடங்குகள் மற்றும் தானிய ஈட்டுக் கடன் ஆகிய வசதிகளை அளித்து வேளாண் உறுப்பினர்கள் தங்களது விளைபொருட்களை வெளிப்படையான முறையில் ஆதாய விலைக்கு விற்பனை செய்ய உதவி வருகின்றன.

ஆ) வேளாண் விளைபொருட்களைக் கொள்முதல் செய்தல், பதனிடுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய

பணிகளுடன், உறுப்பினர்களின் பொருட்களுக்கு மதிப்பு கூட்டும் பணியையும் செய்து வருகின்றது.

**74.** **31.7.2011** வரையில் ரூ.**207.40** கோடி அளவிற்கு வேளாண் விளைபொருள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. **2011–12**ஆம் ஆண்டில் ரூ.**1000** கோடிக்கு வேளாண் விளைபொருள் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### (ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்

**75.** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன்தாரர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர் கடன்தாரர்களின் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்ய உதவி புரிகின்றன. இம்முயற்சிகளால் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன் தொகை வசூலாவதோடு, வேளாண் உறுப்பினர்களின் விளைபொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்ய உதவி வருகிறது. **2011–12**ஆம் ஆண்டில் ரூ.**5** கோடி வசூலாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பாண்டில் 31.7.2011 வரையில் ரூ.**0.53** கோடி தொகை வசூலிக்கப்பட்டுள்ளது .

### (iii) விற்பனையுடன் இணைந்த நுகர்வோர் கூட்டுறவு

**76.** கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடன் இணைந்து செயல்படுகின்றன. இதனால் கூட்டுறவு விற்பனைச்



சங்கங்கள் விவசாய உறுப்பினர்களின் விளைபொருட்களைக் கொள்முதல் செய்து, பதப்படுத்தி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் பண்டகசாலைகளுக்குத் தரமான பொருட்கள் நியாயமான விலையில் கிடைப்பதுடன் விவசாயிகளுக்கும் நியாயமான ஆதாய விலையும் கிடைக்கிறது. **2011–12**ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.**45** கோடி அளவிற்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 31.7.2011 வரையில் ரூ.**9.65** கோடி அளவிற்கு விளைபொருள் மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கு விற்பனை செய்துள்ளது.

### (iv) தானிய ஈட்டுக் கடன் வழங்குதல்

**77.** அறுவடைக் காலங்களில் விவசாயிகள் பெரும்பாலும் தங்களது அவசரத் தேவைகளுக்காக வேளாண் விளை பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் கட்டாயம் ஏற்படுகிறது. இந்நிலையினைத் தவிர்த்து, விவசாயிகளின் நலன்களைக் காக்கும் பொருட்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கி வருகின்றன. இதன் மூலம் விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களைச் சேமித்து வைத்து சாதகமான சந்தை விலை கிடைக்கும்போது உயர் ஆதாய விலைக்கு விற்க இயலும். **2011–12**ஆம் ஆண்டிற்கு, ரூ.**85** கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், 31.7.2011 வரையில், ரூ.**17.65** கோடி அளவிற்கு தானிய

ஈட்டுக் கடன் வேளாண் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**78.** அநேக வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நிதி நெருக்கடியின் காரணத்தால் தங்களிடமுள்ள காலி மனைகளை உபயோகப்படுத்தாமல் உள்ளன. **2011–12**ஆம் ஆண்டில் அரசு **43,500** மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு வசதியினை உருவாக்க ரூ.**17.82** கோடி நிதியுதவி அளிக்க உள்ளது. இதுமட்டுமல்லாமல், கிடங்கு ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்திடம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களைப் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் பயனாக விவசாயிகளுக்கு அறிவியல்பூர்வமான சேமிப்பு வசதி கிடைக்கும். மேலும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் கிடங்கு கொள்ளளவும் தானிய ஈட்டுக் கடன் வழங்கலும் அதிகரிக்கும்.

### (v) <u>பதனிடுதல் மற்றும் வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல்</u>

**79.** சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தி அவைகளின் மதிப்பைக் கூட்ட, பதனிடும் அலகுகள் நடத்தி வருகின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இவ்வலகுகள் மூலம் நியாயமான விலையில் வேளாண் உறுப்பினர்களின் பொருட்களைப் பதப்படுத்தித் தரும் பணியைச் செய்கின்றன. நடப்பாண்டில் 31.7.2011 வரையில் **1897.55** மெ.டன் அளவிற்கு கூட்டுறவுச்



சங்கங்கள் மூலம் வேளாண் விளைபொருட்கள் பதனிடப்பட்டுள்ளன.

### (vi) <u>நெல் கொள்முதல்</u>

**80.** நெல் கொள்முதலை அதிகரிக்கும் நோக்கத்துடனும் காவேரி பாசனப்பகுதி அல்லாத இடங்களில் உள்ள விவசாயிகளின் நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்க உதவும் நோக்கத்துடனும் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்காக, நெல் கொள்முதல் செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன் மூலம் விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்முதல் பணியில் ஈடுபட்டுள்ளன. **2011–12** ஆம் ஆண்டில் கூட்டுறவுகள் மூலம் காவேரி பாசனப்பகுதி அல்லாத மாவட்டங்களில் **2,60,000** மெ.டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. **31.7.2011** வரை **49,000** மெ.டன் அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

### (vii) <u>தரமான விதைகள் விற்பனை</u>

**81.** நல்ல விவசாயத்திற்கு தரமான விதை இன்றியமையாத ஓர் இடு பொருள் ஆகும். மாநிலத்தில் நெல் பயிரைத் தவிர மற்ற பயிர்களின் விதை மாற்று விகிதம் (Seed Replacement Ratio) மிகவும் குறைவாக உள்ளது. நெல்லைத் தவிர பருப்பு வகைகள், எண்ணெய்

வித்துக்கள், தானிய வகைகள் மற்றும் காய்கறி ஆகியவற்றின் தரமான விதைகளை வழங்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. 2011–12ஆம் ஆண்டில் விதைகள் விற்பனைக்கு ரூ.41 கோடி குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### (viii) <u>தகவல் மையங்கள் அமைத்தல்</u>

82. வேளாண்மையில் விற்பனை நோக்குடன் கூடிய செயல்பாடுகள் அதிகரித்து வருகின்றன. விவசாயிகள் விளைபொருட்களின் தேவை மற்றும் விலை விவரங்கள் முன்கூட்டியே அறிந்து அதற்கேற்பத் திட்டமிட்டு வேளாண் பொருட்களை விளைவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பலதரப்பட்ட சந்தைகளில் விளைபொருட்களின் வரத்து மற்றும் விற்பனை, சந்தைவிலை போன்ற நாளது தேதி வரையிலான தகவல்களை அறியவேண்டியதன் அவசியம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் தகவல் மையங்கள் துவங்கக் கேட்டுக்கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து இதுவரை 8 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தகவல் மையங்களைத் தொடங்கியுள்ளன. வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் தொடங்கப்பட்டத் தகவல் மையங்கள் மூலம் வேளாண் பெருமக்களுக்குக் கீழ்க்கண்ட வசதிகள் அளிக்கப்படுகின்றன:–

1) பலதரப்பட்ட சந்தைகளில் பல்வேறு விளைபொருட்களுக்கு நிலவும் சந்தை விலை விவரங்கள்.



2) எதிர்காலத்தில் பயிரிட வேண்டிய பயிர் வகைகள் மற்றும் தட்பவெட்பநிலை குறித்த விவரங்கள்.
3) பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாய மற்றும் தோட்டக்கலை பொருட்களின் விற்பனை விவரங்கள்
4) பயிர் வளர்ப்பு முறைகள் மற்றும் செயல் திட்டங்கள்/சிறந்த நடைமுறைகள் குறித்த விவரங்கள்.
5) அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த விவரங்கள்
6) விற்பனை மற்றும் பண்ணை முறைகள் குறித்த மின்னணு காட்சிப்படம் (Power point presentation).

### (ix) <u>வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை வலுப்படுத்துவதற்கான முனைப்பு நடவடிக்கைகள்</u>

83. அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் தற்போதுள்ள வியாபாரத்தினை விரிவுபடுத்துதல் மற்றும் வேறு புதிய வியாபாரத்தில் ஈடுபடுத்திக்கொள்ளுதல் போன்ற முன்னேற்ற நடவடிக்கைகள் உள்ளடக்கிய ஆண்டு செயல்திட்டத்தினை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றன. புதிய ஏல மையங்களை தொடங்கவும் தற்போதுள்ள ஏல மையங்களின் செயல்பாட்டினை இயக்கிடவும், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வலியுறுத்தப்படுகின்றன. தானிய ஈட்டுக் கடன் வழங்குவதற்கான வசதிகள் மேலும் முன்னேற்றப்படுத்தப்படும். வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

தங்களது வருமானத்தைப் பெருக்குவதற்காகவும், பருவ கால விளைபொருள் வியாபாரத்தில் ஏற்படும் நட்டங்களைத் தவிர்ப்பதற்காகவும், நகைக் கடன் வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளன. போதுமான நடைமுறை மூலதனம் இல்லாத சங்கங்களுக்கு தங்களது வியாபாரத்தினை அதிகரித்திட வட்டியில்லாத நடைமுறை மூலதனம் நிதியுதவியாக வழங்கப்படுகிறது. இந்துஸ்தான் யூனி லீவர் லிமிடெட் நிறுவனத்துடன் ஒரு வியாபார ஒப்பந்தம் மேற்கொண்டு, நுகர்பொருட்களை வாங்கி கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடை மற்றும் இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகள் மூலம் சில்லரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் பலனாக அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் இலாபத்தில் இயங்கி வருகின்றன. இந்த தூண்டுதல்கள், இடைவிடா கண்காணிப்பு, வழிகாட்டுதல் மற்றும் நிதியுதவியின் மூலம் நிலைநிறுத்தப்படும். தேவைப்படின் சங்கங்களின் காலி மனைகளில் ஊரகக் கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதி (RIDF) திட்டத்தின் நிதி உதவி மூலம் கிடங்குகள் கட்டப்படும். வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் கிடங்குகளை, கிடங்கு ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்திடம் பதிவு செய்துகொள்வதன் மூலம் கிடங்கு இரசீதுகள் வழங்கும் வசதியைப் பெற இயலும் . பதனிடும் வசதிகள் தேவைப்படும் இடங்களில் சொந்தமாகவோ அல்லது கட்டுதல், உபயோகித்தல் மற்றும் மாற்றுதல் (Build, Operate,Transfer) முறையிலோ அமைக்கப்படும்
.



## இயல் – 3

### நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகள்

**84.** நுகர்வோர் கூட்டுறவுகள், நுகர்வோர் மற்றும் அவைகளின் உறுப்பினர்களுக்கு, தரமான நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இவை தக்க சந்தைத் தலையீடு உத்திகளைக் கையாள்வதன் மூலம் நுகர்பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்–படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

**85.** தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுகளின் அமைப்பு மூன்றடுக்குகள் கொண்ட அமைப்பாக உள்ளது. அவை,

அ) தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மாநில அளவில்

ஆ) கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மாவட்ட அளவில் மற்றும்

இ) தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அடிப்படை நிலையில்.

### அ) தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்

**86.** தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தலைமை நிறுவனம் என்ற முறையில், இணைப்புச் சங்கங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தும், வசதிகளை ஏற்படுத்தும் விதமாகவும் செயல்படுகிறது. மேலும், அவற்றின் விற்பனை வளர்ச்சி மற்றும் வியாபார முன்னேற்றத்திற்கும் உதவி செய்கிறது. கடந்த 19

ஆண்டுகளாகக் காகிதம் மற்றும் எழுதுப் பொருட்களை கொள்முதல் செய்து மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு அச்சகங்கள் ஆகியவற்றிற்கு விநியோகம் செய்வதை முக்கிய வியாபாரமாகச் செய்து வருகிறது. மேலும், இவ்விணையம் விழாக்காலங்களில் பட்டாசு கொள்முதலை ஒருங்கிணைத்து அனைத்து வகை கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்கிறது. கடந்த சில ஆண்டுகளில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் புதிய வியாபார முயற்சிகளில் ஈடுபட ஊக்குவிக்கப்பட்டது. இவ்விணையம் இந்துஸ்தான் யுனி லீவர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு அனைத்து இந்துஸ்தான் யுனி லீவர் தயாரிப்பு பொருட்களை மாநிலம் முழுவதும் விநியோகம் செய்து வருகிறது. இவ்விணையம் ERP மென்பொருளை அனைத்து கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிலும் நடைமுறைப்படுத்த உறுதுணை புரிந்துள்ளது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 2011–2012ஆம் ஆண்டில் ரூ.15 கோடி அளவிற்கு விற்பனை மேற்கொள்ள குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 31.7.2011 வரை ரூ.4.02 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

## ஆ) <u>நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்</u>

**87.** கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மாவட்ட அளவில் தொடக்கக்



கூட்டுறவு நுகர்வோர் பண்டகசாலைகளின் இணையம் ஆகும். தமிழ்நாட்டில் தற்போது 34 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன. இப்பண்டகசாலைகள் நுகர்பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு தங்களது விற்பனைப் பிரிவுகள் மற்றும் இணைப்புச் சங்கங்களின் விற்பனைப் பிரிவுகள் மூலம் நியாயமான விலையில் விற்பனை செய்வது இவற்றின் முக்கிய பணியாகும். இவை 2902 நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகின்றன. மேலும் 2098 இணைப்புச் சங்கங்கள் நடத்தும் 11148 நியாயவிலைக் கடைகளுக்கு முதன்மைச் சங்கங்களாகவும் செயல்படுகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் 2011–2012ஆம் ஆண்டில் ரூ.655 கோடி அளவிற்கு விற்பனை மேற்கொள்ள குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31.7.2011 வரை ரூ.471.08 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்று உள்ளது.

**88.** பொதுமக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் அனைத்து பண்டகசாலைகளும் சுயசேவைப்பிரிவு மற்றும் பல்பொருள் அங்காடிகளைப் புதுப்பிக்கவும், புதிய பிரிவுகளைத் தொடங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**89.** பண்டகசாலைகளின் கடன் பொறுப்புகளை தீர்வு செய்யவும், வியாபாரத்தை மேம்படுத்தவும் மேற்கொண்ட பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மூலம் திருப்பம் ஏற்பட்டு தற்போது 13 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் நிகர இலாபத்திலும், மேலும் 13 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் நடப்பு இலாபத்திலும்,

8 பண்டகசாலைகள் மட்டுமே நட்டத்திலும் இயங்கி வருகின்றன. அனைத்து மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் இலாபத்தில் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**<u>ERP மென்பொருள் செயல்முறைப்படுத்துதல்</u>**

**90.** நவீன சந்தைமயமாக்கலில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கினை கருத்திற்கொண்டு தற்போது நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் அனைத்து வணிகப் பரிவர்த்தனைகளை நேரடியாக இணையதளம் மூலம் கண்காணிக்கவும், விற்பனை மற்றும் கொள்முதல் செய்யவும் ERP மூலம் (Enterprise Resources Planning) ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டு செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது விற்பனை விவரங்கள் மற்றும் கிட்டங்கி இருப்பு முதலியவற்றை உடனுக்குடன் ஆராய்ந்து, பொருட்களை சரியான விலையில் கொள்முதல் செய்ய உதவுகிறது.

**இ) <u>தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள்</u>**

**91.** தற்போது **366** தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளும், **2844** மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளும் அடிப்படை நிலையில் இயங்கி வருகின்றன. இவை தவிர, **4534** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், பொதுவிநியோகத் திட்டக் கடைகளை நடத்தி வருகின்றன. அவை பல்வேறு நிலைகளில் சில்லரை வணிகம் செய்து வருகின்றன. தொடக்கக் கூட்டுறவுச்



சங்கங்களின் சில்லரை விற்பனை **2011–2012 (31.07.2011** வரை)ஆம் ஆண்டில் ரூ.**1281.67** கோடி ஆகும். மொத்தம் உள்ள **366** தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் **340** பண்டகசாலைகள் இலாபத்திலும், **26** பண்டகசாலைகள் நட்டத்திலும் இயங்கி வருகின்றன. இந்த **26** பண்டகசாலைகளை இலாபம் ஈட்டும் நிலைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## இயல் – 4

## பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

**92.** தமிழ்நாட்டில் **19** பெரும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் பழங்குடியினருக்கு ஒற்றைச் சாளர முறையில் தானிய உற்பத்திக் கடன் வழங்குதல், இடுபொருள் வழங்குதல், விவசாய விளைபொருள் விற்பனை மற்றும் பொது விநியோகத் திட்டம் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் போன்றவை செயல்படுத்தி வருகின்றன. இந்த பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் **96332** பழங்குடியினரும் **17477** பழங்குடியினரல்லாதோரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

**93.** பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எய்தப்பட்ட முன்னேற்ற விவரம் பின்வருமாறு.

(ரூ. லட்சத்தில்)

| ஆண்டு | கடன் வழங்கியது | விவசாய விளை பொருள் கொள்முதல் | சிறுவனப் பொருட்கள் சேகரம் மற்றும் கொள்முதல் | விவசாய இடு பொருட்கள் விற்பனை | கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விநியோகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2011 – 12 31.07.2011 வரை | 2012.66 | 74.56 | 2.60 | 65.63 | 415.79 | 2571.24 |



## இயல் – 5

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

**94.** தனியார் முதலாளித்துவத்திற்கு மாற்றுச் சக்தியாக கூட்டுறவு இயக்கம் விளங்குகிறது. எனவே கூட்டுறவின் நன்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவது இன்றியமையாதது ஆகும். மேலும் கூட்டுறவுப் பணியாளர்கள் தங்களது செயல்திறனை மேம்படுத்த மாறிவரும் காலத்திற்கேற்ப தங்கள் பணித்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் **29** மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றன. மேலும் இவை உறுப்பினர் கல்வித் திட்டங்கள், பொருட்காட்சிகள், கூட்டுறவு வார விழாக்களையும் நடத்துகின்றன.

**95.** தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவுச் சங்கங்களின் நிகர இலாபத்தில் **3** விழுக்காடு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும், **2** விழுக்காடு கூட்டுறவு கல்வி நிதிக்கும், வசூலித்து அதனைப் பராமரித்து வருகிறது. இந்த நிதி கூட்டுறவு ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் கூட்டுறவுக் கொள்கைகள் பிரச்சாரம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

### கூட்டுறவுப் பயிற்சி

**96.** தமிழ்நாட்டில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக **20** கூட்டுறவு மேலாண்மைப்

பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நேரடியாகப் பயிற்சிபெற முடியாத பணியாளர்களும், கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி பெறும் வகையில் அஞ்சல் வழிக்கல்வியும் இந்நிலையங்கள் மூலம் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவுத் துறை பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் குறுகியகாலப் பயிற்சிகளையும் நடத்துகின்றன. கூட்டுறவு நிறுவனங்களில் நகைக்கடன் வழங்குதல் மிகப்பெரிய அளவில் நடைபெறுவதால் "நகை மதிப்பீடு மற்றும் தொழில்நுட்ப பயிற்சி", **2004–05** ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பயிற்சி நிலையங்களில் குறுகியகால கணினிப் பயிற்சிகளான கணினிப் பயன்பாட்டுப் பட்டயம் மற்றும் டேலி (Tally) **9.0** போன்றவைகள் நடத்தப்படுகின்றன.

## தொழிற் கல்வி

**97.** தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி ஆகிய இடங்களில் மூன்று கூட்டுறவு தொழிற் பயிற்சி நிறுவனங்களும், திருச்சி மாவட்டம் இலால்குடியில் ஒரு கூட்டுறவு தொழில்நுட்பக் கல்லூரியும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்படுகின்றன.

**98.** கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்களில் Computer Operation Programme Assistant பயிற்சி, துணிவெட்டுதல் மற்றும் தைத்தல், ஆடை தயாரித்தல், உணவுப்பொருள் தயாரித்தல் மற்றும் கைவினைஞர் மற்றும் மின்பழுதுபார்த்தல் ஆகிய பயிற்சிகள்



அளிக்கப்படுகின்றன. மேலும், இலால்குடி கூட்டுறவுத் தொழில் நுட்பக் கல்லூரியில் இயந்திரப் பொறியியல், கணினிப் பொறியியல் மற்றும் மின்சாரம் மற்றும் மின்னணுப் பொறியியல் ஆகிய பட்டயப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

99. மேலும், தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழுமத்தால் நடத்தப்படும் சென்னை மற்றும் மதுரையில் செயல்படும் இரண்டு கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கு, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஆதரவு அளித்து வருகிறது. இவற்றின் மூலம் கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப் பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும் கூட்டுறவுத்துறை மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்குப் பல குறுகியகாலப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சி நிலையங்களில் வணிக மேலாண்மையில் முதுநிலை பட்டப்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

## சமீபகால சிறப்பு முனைப்புகள்

**100.** தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவில் ஆராய்ச்சி செய்ய மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சென்னை பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் பெரியார் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் ரூ.**5** இலட்சம் வைப்பீடு செய்து தனி இருக்கையை ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் கூட்டுறவுத் தொடர்புடைய தலைப்புகளில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை

வழங்கப்படுகிறது. இது வரையிலும் 20 ஆராய்ச்சி திட்டங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

101. ஒன்பது கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் உணவுப்பொருள் தயாரித்தல் சான்றிதழ் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை 224 மாணவர்கள் இப்பயிற்சியில் சேர்ந்து பயனுற்றுள்ளனர். இவர்களுக்கான வேலைவாய்ப்புகள் ஊக்கமளிப்பதாக உள்ளன.

102. அனைத்துக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களிலும், கோவையிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வணிகவியல் மற்றும் வணிக மேலாண்மையில் பட்டப்படிப்பும், வணிக மேலாண்மை மற்றும் கணினியியலில் முதுநிலைப் பட்டப்படிப்பும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தற்பொழுது 663 மாணவர்கள் பட்டப்படிப்புகளில் பயின்று வருகின்றனர்.

103. 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் 8 மட்டுமே சொந்த கட்டடங்களில் உள்ளன. இதர நிலையங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டுவதற்கான செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் நாகர்கோவில் மற்றும் சிவகங்கை கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கு தலா ரூ.2 கோடி மதிப்பில் சொந்த கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

104. கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள், கூட்டுறவு மேலாண்மை, கூட்டுறவு ஆளுமை, கூட்டுறவுப் பிரச்சாரம் ஆகியவற்றில் மிகச் சிறந்த மையங்களாக



மாற்றுவிக்க அவற்றின் பணிநிலைத்திறன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தைச் செயல்படுத்திடத் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களை ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

# <u>இயல் – 6</u>

## <u>தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்</u>

### (i) <u>பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள்</u>

**105.** மாநில மற்றும் மத்திய அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு சார்ந்த மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்களுக்கென பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பணியாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதும் பணியாளர்களைத் தனியார் கடன் தொல்லைகளிலிருந்து விடுவித்து நியாயமான வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதும் பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்களின் முக்கியக் குறிக்கோளாகும்.

**106.** உறுப்பினர்களுக்கு பிணையத்தின் அடிப்படையில் ரூ.5 இலட்சம் வரை தனிநபர் கடன் வழங்கப்படுகிறது. இது தவிர உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் கல்விச் செலவுக்காக ரூ.2 இலட்சம் வரை கல்விக் கடனும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 1814 பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் உள்ளன. இப்பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்களின் உறுப்பினர் பங்கு மூலதனம் ரூ.1072.12 கோடியாகவும் உறுப்பினர்களின் வைப்புகள் நிலுவை ரூ.2543.83 கோடியாகவும் உள்ளன.



தற்போது உறுப்பினர்களின் கடன் நிலுவை ரூ.8124.97 கோடியாகும்.

### (ii) <u>தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்</u>

**107.** தமிழகத்தில் தற்போது 90 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 33,622 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், ஒப்பந்தப் பணிகள் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்து வருகின்றன.

## இயல் –7

## கூட்டுறவு அச்சகங்கள்

108. தமிழ்நாட்டில் 26 கூட்டுறவு அச்சகங்கள் 12,645 உறுப்பினர்களுடனும் ரூ.2.09 கோடி பங்குத் தொகையுடனும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுத் தேவையை இவை பூர்த்தி செய்கின்றன. மேலும், அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து அச்சிடும் பணி ஆணைகளைப் பெற்று நிறைவேற்றி வருகின்றன.

109. கூட்டுறவு அச்சகங்களைப் புனரமைக்க பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவைகளை, துடிப்புமிக்க, தன்னிறைவு பெற்ற நிறுவனங்களாகச் செயல்படவைக்க, ஒவ்வொரு கூட்டுறவு அச்சகத்திற்கும் விரிவான திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. செலவினங்–களைக் குறைக்க உபரிப் பணியாளர்களை மறுபரவல் முறையின் மூலம் பணியமர்த்தம் செய்தும், பழைய தேவையற்ற இயந்திரங்களை ஏலத்தில் விற்பனை செய்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுப்பணி தேவைகளையும் கூட்டுறவு அச்சகங்களின் மூலம் நிறைவேற்றம் செய்திடும் பணி கூர்ந்து கண்காணிக்கப்படுகிறது. கூட்டுறவு அச்சகங்கள் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய பழைய கடன்களை ஒரு முறை கடன் தீர்வு திட்டத்தின் கீழ் சீரமைப்பு மற்றும் மறு



அட்டவணைப்படுத்திட சீரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

110. 2011–2012ஆம் ஆண்டிற்கு ரூ.45 கோடி வணிகக் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான கூட்டுறவுச் சங்கங்கள் கணினிமயமாக்கப்படுவதைத் தொடர்ந்து கூட்டுறவு அச்சகங்களில் கணினி எழுதுபொருள் மற்றும் அச்சிடப்பட்ட படிவங்கள் தயாரிக்கும் வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## இயல் – 8

## பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

**111.** மாநிலத்தில் பொது விநியோகத் திட்டச் செயல்பாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் 31.7.2011 அன்றுள்ளபடி, 7712 பகுதி நேரக் கடைகள் உட்பட 30636 நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. இதில் 3196 நியாய விலைக் கடைகள் சொந்த கட்டடங்களிலும், 12525 நியாயவிலைக் கடைகள் அரசு கட்டடங்களிலும், 6119 நியாய விலைக் கடைகள் வாடகையில்லாக் கட்டடங்களிலும், 8796 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. இந்நியாயவிலைக் கடைகள் 94 முதன்மைச் சங்கங்கள் 4031 இணைப்புச் சங்கங்கள் மற்றும் 437 சுய எடுப்புச் சங்கங்கள் உட்பட 4562 கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. மேலும், இக்கூட்டுறவுச் சங்கங்கள் 262 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை மாநிலம் முழுவதும் நடத்தி வருகின்றன.

**112.** பொது விநியோகத் திட்டத்தினை நடத்துவதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படும் இழப்பினை அரசு ஈடு செய்யும். 2011-12ஆம் ஆண்டில் இதற்கான அரசு மானியம் ரூ.120 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



### கையடக்கப்பட்டியல் இயந்திரம்.

**113.** பொது விநியோகத் திட்ட நியாயவிலைக் கடைகளில், விற்பனையாளர்கள், விற்பனைப் பட்டியல் மற்றும் கணக்குகளைக் கையினால் எழுதி பராமரிப்பதால், தேவையற்ற கால விரயம் மற்றும் மனித ஆற்றல் விரயம் ஏற்படுவதுடன், முறையான அலுவலகப் பராமரிப்பில் கவனம் செலுத்த இயலவில்லை. எனவே கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் கையினால் இயக்கப்படும் பட்டியல் இயந்திரங்கள், கணினி இணைப்புடன் பயன்படுத்தப்படுவதால், கணக்குகள் பராமரிப்பு எளிதாக்கப்படுவதுடன் விற்பனையாளர்கள் அலுவலகப் பராமரிப்பில் அதிகக் கவனம் செலுத்த இயலும். மேலும் பட்டியல் இயந்திரங்கள் இணைய தளத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்படுவதால் இருப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றை முறையாகக் கண்காணிக்கவும், அதன் மூலம் பொருட்கள் வழங்குவதை முறைப்படுத்தவும் இயலும். எனவே சென்னை மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் செயல்படும் 1080 நியாயவிலைக் கடைகளிலும் மாநிலம் முழுவதும் உள்ள 262 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களிலும் கையடக்கப் பட்டியல் இயந்திரங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த இயந்திரங்களின் செயல்பாடுகளின் அடிப்படையில் மீதியுள்ள நியாய விலைக் கடைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## நியாயவிலைக் கடைகளின் தோற்றப் பொலிவினை மேம்படுத்துதல்.

**114.** கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலம் சுமார் 1.8 கோடி குடும்ப அட்டைதாரர்களின் மாதாந்திர அத்தியாவசியப் பொருட்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இதனால், நியாயவிலைக் கடைகளின் தோற்றம் மற்றும் பொலிவினை மேம்படுத்துதல் அவசியமாகிறது. இதன் தொடர்ச்சியாக, நிதி வசதிக்கேற்ப அனைத்து நியாய விலைக் கடைகளிலும் ஒரே மாதிரியான பெயர்ப்பலகை வைத்தல், நியாயவிலைக் கடைகளின் உட்புறம் மற்றும் வெளிப்புறச் சுவர்களுக்கு ஒரே மாதிரியான வண்ணம் பூசுதல் மற்றும் தேவையான தளவாடச் சாமான்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தேவையான இட வசதியும் நிதியும் கிடைக்கப் பெறும் இடங்களில் நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது தவிர நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்ட சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியும் பயன்படுத்தப்படும். மேலும் நகர்ப்புறங்களில் தங்களது வாடகைக் கட்டடங்களை முன்னுரிமை அடிப்படையில் நியாய விலைக் கடை நடத்துவதற்கு வாடகைக்குத் தர உள்ளாட்சி அமைப்புகள் கேட்டுக்கொள்ளப்படும்.



# இயல் – 9

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

**115.** ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் இந்தியா முழுவதும் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது 10 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**116.** தொழில்நுட்ப மேம்பாடு, பன்முகப்படுத்துதல், நவீன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், கூட்டுறவு அமைப்புகளின் மேலாண்மைத் திறனை மேம்படுத்துதல், பயிற்சித் திட்டம் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகியவைகளின் மூலம் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துவதும் மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கால அளவு ஐந்தாண்டுகளாகும். இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழக அரசால் கடனாகவும், பங்குத்தொகையாகவும், மானியமாகவும் வழங்கப்பட்டு தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து மறுநிதியுதவி (Refinance) பெறப்படுகிறது. மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மாவட்டக் குழு இத்திட்டத்தின் செயல்பாட்டினைக் கண்காணிக்கின்றது. தொடர்புடைய மாவட்டக் மத்திய கூட்டுறவு வங்கி திட்டச்

செயலாக்க முகமையாக நியமிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**117.** இத்திட்டத்தின் கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் கிடங்குகள் கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல், மற்றும் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும், வேளாண்மை விற்பனைத் திட்டம் மற்றும் பதனிடுதல் போன்ற துணைத்திட்டங்களுக்கும் 25 விழுக்காடு மானியம் இந்திய அரசிடமிருந்து பெறப்படுகிறது. இத்திட்டத்தில் வங்கிகளுக்குத் தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகளான வங்கி முகப்புகள், நவீன வைப்புத் தொகை பிரிவு முகப்புகள், இரும்புப் பெட்டகங்கள், பாதுகாப்பு அறை, பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான உள்கட்டமைப்புகள் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான உபகரணங்களுடன் கூடிய டிராக்டர், மருந்து தெளிப்பான், இதர விவசாயக் கருவிகள் போன்றவைகளை வாங்குவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

**118.** கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அலுவலகக் கட்டடம் மற்றும் கிடங்குடன் கூடிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கும், கணினி, தளவாடச்சாமான்கள், கருவிகள், இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் வாங்குவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால்குளிரூட்டும் நிலையங்கள் ஏற்படுத்தவும், பால் கொள்முதல் மையம் அமைப்பதற்கும், மொத்தப் பால் குளிரூட்டி, பால் குவளைகள், பால் தரச் சோதனைக் கருவிகள் மற்றும் இதன் தொடர்புடைய கருவிகளை



வாங்குவதற்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீன் வளர்ப்பு மையங்கள் அமைப்பதற்கும், அதற்குரிய உபகரணங்களான நைலான் வலை, அலுமினியப் பாத்திரங்கள் வாங்குவதற்கும், விற்பனைக் கூடங்கள் கட்டுவதற்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அலுவலகம், இயந்திரக் கூடங்கள்/இயந்திரங்கள் நிறுவுவதற்கும், மேம்படுத்தப்படுவதற்கும், பணிமனையுடன் கூடிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும், அனைத்து வகையான சங்கங்களில் வியாபாரத்தை விரிவாக்க நடைமுறை மூலதனத்தைப் பெருக்குவதற்கு இத்திட்டத்தின் மூலம் விளிம்புத் தொகை வழங்கப்படுகிறது.

**119.** தற்போது செயல்பட்டு வரும் திட்டங்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**<u>தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிதி விடுவிக்கப்பட்ட விவரம்</u>**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | திட்ட காலம் | மொத்த திட்ட ஒதுக்கீடு | 31.3.2011 வரை அரசால் விடுவிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | சேலம் | 2008-2013 | 2651.580 | 2138.020 |
| 2. | ஈரோடு | 2008-2013 | 3564.430 | 2773.510 |
| 3. | மதுரை | 2008-2013 | 2439.680 | 1919.426 |
| 4. | புதுக்கோட்டை | 2008-2013 | 1437.560 | 1123.101 |
| 5. | திருநெல்வேலி | 2010-2015 | 4220.850 | 780.910 |
| 6. | சிவகங்கை | 2010-2015 | 2743.800 | 680.360 |
| 7. | திண்டுக்கல் | 2010-2015 | 3085.780 | 812.980 |
| 8. | கரூர் | 2011-2016 | 2563.700 | நிதி விடுவிக்கப்படும் நிலையிலுள்ளது |
| 9. | நாகப்பட்டினம் | 2011-2016 | 4219.350 | நிதி விடுவிக்கப்படும் நிலையிலுள்ளது |
| 10 | வேலூர் | 2011-2016 | 3169.870 | நிதி விடுவிக்கப்படும் நிலையிலுள்ளது |
| | **மொத்தம்** | | **30096.600** | **10228.307** |

## செயல்பாட்டிலுள்ள மாவட்டங்களில் உருவாக்கப்பட்ட கட்டுமானம் / உள்கட்டமைப்பு வசதிகள்

| வரிசை எண் | மாவட்டத்தின் பெயர் | கிடங்குடன் கூடிய அலுவலக கட்டடம் | அலுவலக கட்டடம் | கிடங்கு | பாதுகாப்பு அறை | சுற்றுச் சுவர்/ பழுது பார்த்தல்/ இதர இனங்கள் | வங்கிகளின் உள் கட்டமைப்பு வசதிகள் | கணினி | விளிம்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) | (2) | (3) | (4) | (5) | (7) | (6) | (8) |
| 1 | சேலம் | 11 | 20 | 18 | 27 | 68 | 248 | 74 | 524.780 |
| 2 | ஈரோடு | 24 | 10 | 31 | 25 | 83 | 242 | 140 | 391.150 |
| 3 | மதுரை | 33 | 3 | 4 | 20 | 99 | 216 | 4 | 388.700 |
| 4 | புதுக்கோட்டை | 14 | – | – | 14 | 81 | 134 | 40 | 444.200 |
| 5 | திருநெல் வேலி | – | – | – | – | – | – | – | 100.000 |
| 6 | சிவகங்கை | – | – | – | – | – | – | – | 108.000 |
| 7 | திண்டுக்கல் | – | – | – | – | – | – | 2 | – |
| 8 | கரூர் | – | – | – | – | – | – | – | – |
| 9 | நாகப்பட்டினம் | – | – | – | – | – | – | – | – |
| 10 | வேலூர் | – | – | – | – | – | – | – | – |
| | மொத்தம் | 82 | 33 | 53 | 86 | 331 | 840 | 260 | 1956.830 |

**120.** நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான திட்ட அறிக்கை மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினை எஞ்சியுள்ள



திருவள்ளூர், நாமக்கல், கன்னியாகுமரி மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்த தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு பரிந்துரை செய்துள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் இம்மாவட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## பயிற்சித் திட்டம் மற்றும் செயல்திறன் மேம்படுத்துதல்

**121.** கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குச் சிறந்த சேவை செய்வதற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுத்துவதற்குத் திறமையான பணியாளர்கள் அவசியம் என்பதாலும் இத்திட்டத்தில் பயிற்சி மற்றும் செயல்திறன் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொது மேலாளர்கள் மற்றும் வளர்ச்சி அலுவலர்களுக்குத் திட்டமிடுதல், கூட்டுறவு அமைப்புகளை நிர்வகித்தல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. கூட்டுறவு இயக்கத்தில் உறுப்பினர்கள் ஈடுபாட்டுடன் பங்கு பெறவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சங்கத்தின் செயல்பாட்டினைப் பொறுத்து ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

## திட்டத்தின் தாக்கம்

**122.** இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட இடங்களில் சாதகமான பலன்களை ஏற்படுத்தியுள்ளது. புதிய உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டதன் மூலம்

உறுப்பினர்களிடையே நம்பிக்கை உருவாகி வியாபாரமும் அதிகரிக்கப்படுகிறது. கூடுதலான விளிம்புத் தொகை வழங்கப்பட்டதன் காரணமாக சங்கங்களின் செயல்பாடுகளும் இலாபம் ஈட்டும் திறனும் மேம்படுத்தப்படுகின்றன. மேலும், இத்திட்டத்தின் மூலம் தரமான சேவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. இதனால் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது.



## இயல் – 10

## கூட்டுறவுத் தேர்தல்

**123.** தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் அதன் தொடர்புடைய விதிகளின்படி, மாநிலத்தில் உள்ள தொடக்க, மத்திய, தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை 2007ஆம் ஆண்டு சூன் 8ஆம் தேதி முதற்கொண்டு நடத்த அரசு ஆணையிட்டது. ஆனால் தேர்தலின் போது நிலவிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு தேர்தல் நடவடிக்கைகள் இரத்து செய்யப்பட்டன. அரசின் இந்த உத்தரவு தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றம் தேர்தலை ரத்து செய்த அரசாணையை, ரத்து செய்தது. இவ்வாணையினை எதிர்த்து, அரசு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் ஆணை எதிர்நோக்கப்படுகிறது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்பட்டவுடன், உரிய மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**124.** விவசாயிகளுக்குத் தேவையான பயிர்க்கடன், இடுபொருட்கள் போன்றவற்றை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், விளைவித்த பொருட்களை நல்ல விலைக்கு விற்பனை செய்து கொடுக்கும் பணியை வேளாண்மை உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், நுகர்வோர் தேவையை நிறைவு செய்திட நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலைகளும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இத்துறையின் செயல்பாடுகளைச் செவ்வனே நிறைவேற்றிட தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

செல்லூர் கே. ராஜு,
கூட்டுறவுத்துறை அமைச்சர்.



## இணைப்பு

## 2011–12ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 579.25 | -- | 1 | 579.26 |
| கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 41015.02 | 27667.86 | 1348.89 | 70031.77 |
| **மொத்தம்** | **41594.27** | **27667.86** | **1348.90** | **70611.03** |